# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**தேதி:- 26.07.2016**

**ஒப்பந்த ஊழியர் பிரச்சனையில் நிர்வாகத்துடன் நடைபெற்ற பேச்சு வார்த்தை**

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும், தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் இணைந்து ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளுக்காக 27.07.2016 அன்று சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன்பு மாநிலந் தழுவிய தர்ணா போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்திருந்தன. நமது போராட்ட அறைகூவலை ஒட்டி மாநில நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தது. அதன் அடிப்படையில் 26.07.2016 அன்று காலை 11.30 மணியளவில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. அந்த பேச்சு வார்த்தையில் நமது சார்பாக தோழர் S.செல்லப்பா AGS BSNLEU, தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS BSNLEU, தோழர் M.முருகையா CP TNTCWU, தோழர் K.சீனிவாசன் CT, BSNLEU மற்றும் தோழர் R.மகேந்திரன் COS BSNLEU ஆகியோரும், நிர்வாகத்தின் சார்பில், திரு சுப்ரதா சாட்டர்ஜி GM(HR), திருமதி திரிபுர சுந்தரி DGM(A), திரு ஆஞ்சனேயலு AGM(A) மற்றும் திரு நாகராஜன் AGM(SR) ஆகியோர் பங்கேற்றனர்.

நிர்வாகத்தின் தரப்பில் நாம் கொடுத்த போராட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்ட பிரச்சனைகள் அனைத்தையும் நிர்வாகத்தின் சார்பில் 23.06.2016 அன்று நடத்தப்பட்ட WEBINORல் அனைத்து பொது மேலாளர்களிடமும் விவாதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் முதன்முறையாக விவாதிக்கப்பட்டது என்பது நமது போராட்ட அறைகூவலுக்கு கிடைத்த முதல் வெற்றி. இப்படிப்பட்ட முயற்சி மேற்கொள்ளப் பட்டதற்கு நமது சங்கங்களின் சார்பில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டோம். மேலும் 27.07.2016 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் கீழ்கண்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன:-

1. **20.05.2009 முதல் ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை:-** இது தொடர்பாக 26.06.2015 அன்றே மாநில நிர்வாகம் கொடுத்த கடிதத்தின் மீது ஓராண்டு காலம் கழிந்த பின்பும் எந்த ஒரு மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்பதை கடுமையாக சுட்டிக்காட்டினோம். நிர்வாக தரப்பில் ஈரோடு மாவட்டத்தில் இதற்கான இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தனர். காரைக்குடி, தஞ்சை மற்றும் கும்பகோணம் ஆகிய மாவட்டங்களில் நிலுவைத் தொகை பட்டுவாடா ஆகிவிட்டதாகவும், மதுரை மாவட்டத்தில் இந்த நிலுவைத் தொகை பொருந்தாது என்றும் அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் தெரிவித்துள்ளதாக நிர்வாக தரப்பில் சொல்லப்பட்டது. இந்த நான்கு மாவட்ட நிர்வாகங்களும் தெரிவித்த தகவல்கள் உண்மைக்கு மாறானது என்பதை நாம் விளக்கமாக எடுத்துக் கூறினோம். அதனை நிர்வாகம் ஏற்றுக் கொண்டு, மாவட்ட நிர்வாகங்களிடம் ஒரு வார காலத்திற்குள்ளாக எழுத்து பூர்வமான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், அது வந்த பின்னர் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிர்வாகம் கூறியுள்ளது. மேலும்

ஒரு மாத காலத்திற்குள் அனைத்து மாவட்டங்களிலும் நிலுவைத்தொகை வழங்கப்பட வேண்டும் என்ற நமது கோரிக்கையினை மாநில நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

2. **7ஆம் தேதிக்குள் மாத ஊதியம்:-** கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும், சட்ட விதிகளின் படி பிரதி மாதம் 7ஆம் தேதிக்குள் ஊதியம் வழங்கப்படுவதில்லை என்பதை சுட்டிக்காட்டி அதனை உறுதிப்படுத்த மாவட்ட நிர்வாகங்கள் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்பதை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். பிரதி மாதம் 7ஆம் தேதிக்குள் ஒப்பந்த தாரர் ஊதியம் வழங்க வில்லை எனில் சட்ட விதி எண் 21(4)ன் படி நிர்வாகம் 10ஆம் தேதிக்குள் ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளோம். மாவட்ட நிர்வாகங்களுடன் பேசி இனிமேல் ஒவ்வொரு மாதமும் 7ஆம் தேதிக்கு முன் ஊதியம் வழங்குவதை உறுதி செய்வதாக கூறியுள்ளது.

3. **போனஸ்:-** ஒப்பந்த ஊழியர்களுக்கு பல மாவட்டங்களில் போனஸ் வழங்காதது தொடர்பாக நாம் சுட்டிக்காட்டி இதனை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என கோரியுள்ளோம். இது தொடர்பாக மாவட்ட நிர்வாகங்களுக்கு உறுதியான கடிதம் எழுதப்படும் என்று நிர்வாகம் கூறியுள்ளது.

4. **EPF:-** EPFல் சிறிது முன்னேற்றம் இருந்தாலும், இன்னமும் பல மாவட்டங்களில் EPF கட்டுவதில் உள்ள குழறுபடிகளை எடுத்துக் கூறினோம். குறிப்பாக CGM அலுவலகத்திலேயே வாங்கும் ஊதியத்தை குறைத்துக் காட்டி EPF கட்டப்படுவதையும் ஆனால் முழுத் தொகையினையும் நிர்வாகத்திடம் ஒப்பந்த தாரர் வாங்கிக் கொள்வதையும் நாம் ஆதரத்துடன் விளக்கிக் கூறினோம். EPF முறையாக கட்டாததால், ஒப்பந்த ஊழியர்கள் பாதிக்கப்படுவதையும், BSNL பணம் ஒப்பந்ததாரர்களால் கையாடப்படுவதையும் எடுத்துக் கூறினோம். ஒவ்வொரு மாதமும் WAGE SLIP கொடுத்தாலும், E-PASS BOOK மற்றும் UAN வழங்கினாலும் அது முறையாக கண்காணிக்க முடியும் என்பதையும் சுட்டிக்காட்டி நிர்வாகம் இதில் ஒப்பந்ததாரரை கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் கோரினோம். இதனை முழுமையாக நிர்வாகம் ஏற்றுக்கொண்டு, இதற்காக மாவட்ட நிர்வாகங்களுக்கு உறுதியான உத்தரவு வழங்கப்படும் என்று கூறியது.

5. **ESI:-** இதிலும் முன்னேற்றம் இருந்தாலும், பல இடங்களில் ESI SMART CARD கொடுக்கப்படாதது தொடர்பாகவும், பல மாவட்டங்களில் இதற்கான பணத்தை ESI அலுவலகத்தில் செலுத்தாதது தொடர்பாகவும் மாநில நிர்வாகத்திடம் எடுத்துக் கூறப்பட்டது. இதனை முழுமையாக நிர்வாகம் ஏற்றுக்கொண்டு, இதற்காக மாவட்ட நிர்வாகங்களுக்கு உறுதியான உத்தரவு வழங்கப்படும் என்று கூறியது.

இந்த அனைத்து பிரச்சனைகளையும் கண்காணிக்க மாவட்டங்களில் போடப்பட்டுள்ள NODAL OFFICERSகளும் இது தொடர்பாக கறாராக கண்காணிக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று மாநில நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

மேலும் ஒப்பந்த ஊழியர்கள் செய்யும் பணிகளை பொறுத்து SKILLED, SEMI SKILLED மற்றும் UNSKILLED என வகைப்படுத்தி அதற்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தி உள்ளோம். இது தொடர்பாக மீண்டும் விவாதிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இது தவிர நாகர்கோவில் மாவட்ட 28.6 நாட்கள் ஊதிய பட்டுவாடா மற்றும் வேலூரில் குறைக்கப்பட்டுள்ள 4 பணியிடங்கள் தொடர்பாகவும் கவனிக்க மாநில நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில், நிர்வாகம் நடத்தியுள்ள WEBINOR, போடப்பட்டுள்ள உத்தரவுகள், தொடர்ச்சியாக இந்த பிரச்சனையில் தலையிடுவதாக கொடுத்துள்ள உறுதி மொழிகள், பதினைந்து நாட்கள் இடைவெளியில் இது தொடர்பாக சங்கங்களுடன் மீண்டுமொரு பேச்சு வார்த்தை ஆகிய மாநில நிர்வாகத்தின் சாதகமான அணுகுமுறைகளை கணக்கில் கொண்டு 27.07.2016 அன்று நடைபெறுவதாக இருந்த தர்ணா போராட்டத்தை ஒத்தி வைப்பதாகவும், விரைவில் இவற்றில் தீர்வு காணப்படவில்லை எனில் போராட்டம் தொடரும் என்றும் நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளோம்.

உறுதியான போராட்ட அறிவிப்பும், ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்புமே இந்த முன்னேற்றங்களுக்கு அடிப்படையான காரணம். எனவே நமது தோழர்கள் நமது போராட்ட கூர் வாளை தீட்டி வைப்போம். நியாயம் கிடைக்கவில்லை எனில் வலுவான போராட்டங்களின் மூலம் நமது கோரிக்கைகளை வென்றடைவோம்.

ஒப்பந்த தொழிலாளர்களின் சிரமத்தை புரிந்துக் கொண்டு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முன்வந்த பொது மேலாளர், துணைப்பொது மேலாளர், உதவி பொது மேலாளர்கள் மற்றும் அதற்கு வழிகாட்டிய மாநில தலைமை பொது மேலாளர் அவர்களுக்கும் நமது சங்கங்களின் சார்பாக நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள,

**A.பாபு ராதாகிருஷ்ணன்**
**மாநில செயலாளர்**
**BSNLEU**

**C.வினோத் குமார்**
**மாநில செயலாளர்**
**TNTCWU**